ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௯. ஆங்கீரஸஹு மார்கழி மீ பகுதி ௧௨.
Vol. 9. December 32 & January 33. **No. 12.**

சந்தாதார்கட்கு அறிவிப்பு.

—— o ——

நமது திவாகரம், எம்பெருமானுடைய அநுக்ரஹத்தாலும், பெரியோர்களின் திருவருளாலும் ஒன்பதாண்டு முடிவாக இனிது நடைபெற்றது. இதுவரை இதில் பலவரிய பெரிய விஷயங்கள் வெளியிடப் பட்டுள்ளன, இவற்றான் ஐயத்தினீங்கித்தெளிந்தார் பலருளர். பெரியோர்களை அணுகி விஷயங்களைக்கேட்டுத்தெளிவதற்கு அவகாசமில்லாதவர்கட்கும், 'பகவத் விஷயங்களைக்கேட்பதற்கு ஒருவழியுமில்லையே' என்று தேசாந்தரங்களிற் சென்று வருந்துபவர்க்கும், தக்க ஆசிரியனின்றித்தடுமாறும் மனத்தளர்வுடையார்க்கும் கலாசாலையிற் பயிலும் மாணாக்கர்கட்கும் இதுபோன்ற பத்திரிகைகள் பெருந்துணையாயிருக்குமென்பது ஒருதலை,

இஃதல்லாமலும் இதில் அறிவொழுக்கங்களிற்சிறந்த சான்றோர்களின் கட்டுரைகள் வெளியாகின்றமையால், அவை, வழியறியாது தடுமாறும் மாந்தர்களின் மனமாசகற்றும் ஆசிரியனைப்போல் உபகரிக்கும் பெற்றியனவாய்த்திகழ்கின்றன. மேலும், இக்காலத்தில், நவீன நாகரிகத்தை மேற்கொண்டோம்' என்று விருது பிடித்துக்கொண்டு வீணான பிரசங்கங்களைச் செய்துழல்வாரின் மாயவலையிற் சிக்காது உண்மை இன்னதென்றறிவதற்கும் இது உறுதுணையாயிருக்கும்

இத்தகைய உபகாரங்கள் செய்கிற இப்பத்திரிகை நீண்டகாலம் நடைபெறுவதற்குப்போதிய நிதி சேர்க்கவேண்டுமென்று எடுத்துக்

கொண்ட உழைப்பிற்கு ஓரளவில்லை. அபிமானிகளை நேரிற்கண்டும், பத்திரிகை வாயிலாகவும் இதுவிஷயத்தை எத்துணையோமுறை தெரிவித்துள்ளோம். உபகரிக்கும் சக்தியுடைய பல தனவான்களைக்கண்டு பேசியதுமுண்டு. அவர்களுள் ஒருசிலரே உபகரித்துள்ளார்கள். அவர்கள் உபகாரம் இதற்குப்போதிய அளவில்லை. சிலர் ஜீவித சந்தாதார்களாகக்கையொப்பமிட்டவர்கள் ரூபா கொடுக்காதிருக்கிறார்கள்.

நம் சமயத்தைக்குறிப்பிடுகின்ற பல பத்திரிகைகள் உலாவின. அவையெல்லாம் நின்றுவிட்டன. இப்பொழுது நம் திவாகரம் ஒன்றே நிலவுகிறது. இந்நிலைமையில் வைஷ்ணவவுலகம் இதனையும் ஆதரிக்காமல் விட்டுவிடுமானால், எப்படி நம் சமயம் விர்த்தியாகும்? நம் பூர்வாசார்யர்கள் பொனனேபோற்போற்றிய சமயமன்றோ! சமயப்பணிவிடையில உடலபொருள் ஆவிகளையும் உரிமையாக்கவேண்டுவதும் நமது கடமையாகுமல்லவா. இக்காலத்தில் நவீன சமயவாதியர் ஊண் உறக்கமின்றிச் சமயத்தொண்டு புரிவதையும் கண்கூடாகக் காண்கின்றோமே. இதனாலேனும் நம் சமயாபிவிர்த்தியில் நமக்கு மனவெழுச்சியுண்டாகவேண்டாவோ?

ஆய்ந்தமைந்த அறிவுடையோர்களால் அபிமானிக்கப்பட்டு நம் திவாகரம் விளங்குகிறது. இதற்கு அங்கமாக ஒரு அச்சாபீசும் ஏற்பட்டுளது. பிரயோஜனத்தை விரும்பாமல் பொறுப்பாய்க் கார்யம் பார்ப்பதற்குரியவர்களுமிருக்கிறார்கள். இத்துணை வாய்ப்புடன் ஒன்றமைவது அருமையாகும். இவற்றையெல்லாம் நன்காராய்ந்து அபிமானிகள் ஆதரிப்பதற்கு முனவருவார்களாக.

எல்லோரும் விரும்பிப் படித்தற்குரிய 'அஷ்டாதசரஹஸ்யம்' 'ஆசார்யஹ்ருதயம்' 'ஸ்ரீவசனபூஷணம்' 'தத்வத்ரயம்' முதலிய வியாக்யான க்ரந்தங்கள், இப்பொழுது விலைக்குக்கிடைப்பதும் அருமையாய் விட்டன. இவற்றை அச்சுப்பிழையின்றிப்பரிசோதித்து அச்சிட்டு இலாபத்தைக் கருதாமல் சௌகர்யவிலைக்குக்கொடுக்கலாம். சிறுவர்கட்கும் போதமாதற்குரிய சிறிய நூல்களும் வெளியிடலாம் பல் துண்டு ப்ரசுரங்களும் ப்ரசுரிக்கலாம். இந்தக்காரியங்களைச் செய்வதற்கு அநுகூலமாயிருக்குமென்றே அச்சியந்திரசாலை ஏற்படுத்தப்பட்டது.

பல வித்வான்கள் சேர்ந்து ஒவ்வொருவரும் பலவிடஞ்சென்று நம் சமயப்பிரசாரஞ்செய்து விர்த்திசெய்கின்றகாரியத்தை, இக்காலத்தில் துண்டுப்பிரசுரவாயிலாகவும், மாதப்பத்திரிகைவாயிலாகவும் செய்து விடலாம். இவற்றைக் காலத்திற்கேற்றவாறு செம்மையாய் நடத்த வேண்டும். அபிமானிகளின் பொருளுதவியிருந்தாலன்றி இக்காரியத்தை ஒழுங்காக நடத்துவதற்கு முடியாது.

ஐந்து மாணவர்களையாவது பத்து மாணவர்களையாவது ஆதரித்துக்கல்வி பயிற்றுவித்து, அவர்களைப்பலவிடங்கட்கும் அனுப்பி நம் சமயாபிவிர்த்தி செய்யவேண்டுமென்றே இப்பத்திரிகையும் பிரபலமாக அச்சாபீஸும் தொடங்கினோம். இவற்றில் போதிய பொருளுதவி கிடைக்காததினால் கருதிய காரியத்தைச் செய்வதற்கியலவில்லை. நம் சமயத்தைக்கைப்பற்றியிருக்கிற ப்ரபலகனதனவான்களுள் ஒருவரே இந்த நற்காரியத்திற்குதவி புரியலாம். இத்துணைப் பெருங்கொடையாளிகளை இக்காலத்தெதிர்பார்ப்பதென்பது அருமையே. ஆதலால் இருநூறு ஜீவிதசந்தாதார்கள் சேர்ந்தேனும் உதவிபுரியலாம். அல்லது சிறந்த அபிமானிகள் பத்துப்பேர் சேர்ந்தேனும் துணைசெய்யலாம். எவ்வழியிலாவது ஆதரித்தாற்றான் இதனைச் செவ்வனே நடத்தவியலும்.

பத்திரிகை தொடங்கிய காலமுதல் இதுவரை எழுதுபவருக்கும், இதன் வரவுசெலவு முதலிய காரியம் பார்ப்பவருக்கும் பத்திரிகை வரவிலிருந்து யாதொரு உபகாரமும் செய்யவியலவில்லை. மேலும் இரண்டு வருஷகாலமாக அச்சுக்கூலி, பேப்பர், தபாற்செலவு முதலியவைகட்குச் சந்தா வரவு போதாமல் வருஷம் ஒன்றுக்கு இருநூறு ரூபாவரை அதிகமாகச்செலவாயிருக்கிறது. வருஷமொன்றுக்குப்பத்துரூபா வீதம் தவறுமற்கொடுப்பவர்கள் இருபதுபேர்கள்சேர்ந்துஉபகரித்தால், இந்தநஷ்டத்தைப்பரிகரித்துக்கொண்டு இதனை இதுவரையிலும் நடத்தியதுபோல நடத்தலாம். அவ்வாறு உபகரிக்கிற ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் பத்துப்பத்திரிகை கொடுக்கலாகும்.

சந்தாதார் இருப்பிடஞ்சென்று சந்தாப் பணம் வசூல் செய்ய முயன்றாலும் சிலர் ஒழுங்காகக் கொடுப்பதில்லை. வி. பி. அனுப்பி

னாலோ அதனால் ஏற்படுகிற கஷ்டநஷ்டங்களை எழுதுவதற்கும் மனங் கூசுகிறது.

இதுவரையும் பத்திரிகையாலுண்டாகின்ற நன்மை இன்னதென்பதும், இன்ன நோக்கத்துடன் இப்பத்திரிகை உழைத்துவருகிறதென்பதும், இக்காலத்திற்கு இது இன்றியமையாததென்பதும், அதனால் வைஷ்ணவஉலகம் இதனையாதரிப்பதற்குக்கடமைப்பட்டுளதென்பதும், இப்பொழுது இதற்கேற்பட்டுள்ள குறையின்னதென்பதும், அதனை யகற்றும்வழியின்னதென்பதும் குறிப்பிடப்பட்டன.

இவற்றையெல்லாம் சந்தாதார்களும், அபிமானிகளும் நன்றாக ஆராய்ச்சிசெய்து நஷ்டமடையாதிருக்கிற முறையில் பத்திரிகையை நடத்திவர ஏற்பாடு செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

சஞ்சிகையில் காலணாஸ்டாம்பு ஒட்டியனுப்புவதற்கு வருடந்தோறும் ஆர்டர் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று போஸ்டாபீஸார் புதிதாய் ஒருவிதி விதித்துள்ளார்கள். அவர்களிட்ட கட்டளையின்படி ஆர்டர் பெறுவதற்கு நாட்பல கழிந்தமையால் இவ்வளவுகாலம் பத்திரிகை வெளியேறுவதற்குத் தாமதமாயிற்று. இனி சந்தாதார்களின் முழு உதவியைக்கொண்டே பத்தாமாண்டுப்பத்திரிகை தொடங்கவேண்டியதிருப்பதால், சந்தாதார்களும் அபிமானிகளும் இப்பத்திரிகை விஷயத்தில் தம் கருத்தை விரைவில் வெளியிடவேண்டுகிறோம்.

மானேஜர்.

ஸ்ரீ:

பன்மணித்திரள்.

இரண்டு முழுமதியினர்.

அறிவீனர்களை முழுமதியினரென்று வழங்குவதுண்டு. கூரிய புத்தியில்லாத காரணத்தால் இவர்கள் இங்ஙனம் வழங்கப்பட்டனர். இங்கு இரண்டு முழுமதியினரென்றது இராவணன் துரியோதனனென்ற இருவரை. இராவணன், அநுமானென்ற ஒருவானரத்தால் கிங்கரர் சம்புமாலி பஞ்சசேனாதிபதிகள் அட்சகுமாரன் முதலானவர்களும், அசோகவனமும் அழிவுற்றமையைக் கண்டான். இவ்வாறு கண்ட இவன், 'இங்ஙனம் ஒரு வானரம் செயற்கரிய செயலைச் செய்ததென்றால் எழுபது வெள்ளம் வானரம் என்ன செயலைச் செய்யுமோ? இவற்றைத் துணையாகக் கொண்டுள்ள இராமன் என்ன காரியத்தைச் செய்வானோ? அம்மம்ம! இந்த இராமனோடு போர்செய்வதென்ற புத்தியை அடியோடொழித்துவிடவேண்டும்' என்று கருதாமல் மேன்மேலும் யுத்தஞ்செய்யவேண்டுமென்று துணிந்தான். அதனால் இராவணனை மூடனென்று துணிவாகச் சொல்லலாம்.

பஞ்சபாண்டவர்கள் அஜ்ஞாதவாசஞ் செய்துகொண்டிருந்த காலத்தில் அவர்களைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று துரியோதனன் கவலையுற்றான். அப்பொழுது பீஷ்மர், 'பஞ்சபாண்டவர்களிருக்கின்ற நாடு செழிப்புடையதாயிருக்கும்; அத்தகைய நாடு எதென்று ஆராய்ந்தால் அவர்களைக் கண்டுபிடிக்கலாம்' என்றனர். துரியோதனன் ஒற்றரையழைத்துச் 'செழிப்புற்ற நாடி யாது? என்று ஆராய்ந்துவம்மின்' என்றனுப்பினான். அவர்களும் பலதேசங்கள் சென்று ஆராய்ந்துவருகையில் விராடராஜனிருக்கின்ற நாடே மிகவும் செழிப்பாகவிருக்கக் கண்டனர். உடனே துரியோதனனிடத்திற்சென்று செய்தியையறிவித்தனர். துரியோதனன விராடனுடைய பசுக் கூட்டங்களைக் கவர்ந்துவரும்படி வீரர்களையனுப்பினான். அவர்களும் பசுக்கூட்டங்களைக் கவர்ந்துகொண்டிருக்கும்போது துரியோதனன், சேனைகள் சூழப்புறப்பட்டுவந்து அவ்வீரர்களோடு கலந்துகொண்டான்.

இங்ஙனம் நிகழ்ந்த செய்தியைக் காவலர் சென்று விராடனுக்கறிவித்தனர். விராடன் தன்புதல்வனாகிய உத்தரனையழைத்துப் 'பசுக்களை மீட்டிக்கொண்டு வருவாய்' என்று ஏவினன். அப்பொழுது உத்தரன் எனக்குத்தகுதியான ஓர் சாரதிவேண்டுமென்றான். இதனைக் கேட்ட பேடி ரூபம் தாங்கி நின்ற அர்ச்சுனன் யான் சாரதியாய் வருகிறேன் என்றான். உத்தரனும் சம்மதித்து யுத்தசன்னத்தனாய்ச் செல்லுகையில், துரியோதனாதியரின் சைன்யங்களைக் கண்டு நடு நடுங்கி ஓடினான். அப்பொழுது பேடிரூபங் கொண்டிருந்த அர்ச்சுனன் உத்தரனை நோக்கி 'நீ போர் செய்ய வேண்டாம்; யானே போர் செய்து வெற்றி கொள்கிறேன் ; பயப்படாதே' என்று வேண்டிய தைரியங் கூறித் துரியோதனாதியரை யெதிர்த்துப் போர் செய்து மஹாவீரர்களாகிய பீஷ்மர் கர்ணன் முதலானவர்களெல்லாம் தோல்வியடையும்படி செய்தான்.

பின்னர் பேடியாய் வந்து யுத்தஞ் செய்தவன் அர்ச்சுனனேயென்று துரியோதனன் தெரிந்துகொண்டான். இங்ஙனமறிந்த துரியோதனன், 'அர்ச்சுனன் தனியனாய் நின்றே நம்மையும், மஹாவீரர்களையும் தோல்வியடையும்படி செய்தானே; இவனுடைய பேராற்றல் என்னே! இவனுக்குத் துணையாகத் தர்மபுத்திராதியரும் சேர்வார்களாகில் உலகில் நம்மை வைத்திருக்க மாட்டார்கள்; ஆதலால் இனி நாம் இவர்களோடு போர் செய்யாதிருப்பதே தகுதியாம் என்று கருதாமல் துரியோதனன் மேன்மேலும் பாண்டவர்களோடு போர் செய்து வெற்றிகொள்ள விரும்பினனாதலால் இவனும் ஓரறிவற்றவனாவான் என்பதில் ஐயமுண்டோ?

வைசம்பாயனர் ஜநமேஜயனை நோக்கி, 'நீ இராஜகாரியமே பரம புருஷார்த்தமென்று அதிலே கருத்தைச் செலுத்துகின்றாய்; இதனால் பிரயோஜனமென்? ஆத்மார்த்த விஷயத்திலும் கருத்தைச்செலுத்த வேண்டியதும் கடமையாகுமன்றோ! பிறப்பெடுத்ததின் பிரயோஜனம் இதுதானே; ஆதலால் புண்ணிய சரிதமாகிய பாரதத்தைச் சொல்கிறேன்; கேட்பாய்' என்றனர். இதனைக்கேட்ட ஜநமேஜயன் எனக்கு இராஜகாரியம் மிகுதியுமிருப்பதால் தேவரீர் அருளிச்செய்வதைக்கேட்பதற்கு அவகாசமில்லையென்றான். ஒரு அத்தியாயத்தையாவது

கேட்பாய் என்றனர். அதற்கும் எனக்கவகாசமில்லையென்றான். ஒரு சுலோகத்தையாவது கேட்பாய் என்றனர். அப்படியானால் அருளிச் செய்வீர் என்றான். வைசம்பாயனர், "𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌮𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑍌 𑌮𑍂𑌢𑍌 𑌦𑍁𑌰𑍍𑌯𑍋𑌧𑌨 𑌦𑌶𑌾𑌨𑌨𑍌, 𑌗𑍋𑌗𑍍𑌰𑌹𑌂 𑌵𑌨𑌭𑌙𑍍𑌗𑌂𑌚 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌯𑍁𑌦𑍍𑌧𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃" "த்வாவிமௌ புருஷௌ மூடௌ துர்யோதன தசாநநௌ, கோக்ரஹம் வநபங்கஞ்ச த்ருஷ்ட்வாயுத்தம் புந: புந:" என்றுரைத்தார்.

இங்கு வைசம்பாயனர் ஜநமேஜயனை நோக்கி இரண்டுபேர் மூடர்கள் என்றார். ஜநமேஜயன் அவர்கள் யாவரெனக்கேட்டான். இராவணன் துரியோதனன் என்றார். இவர்கள் மூடரென்று சொல்வதற்குக் காரணம் யாதெனக்கேட்டான். ஒரு வானரம் அசோகவனத்தை யழித்ததை இராவணன் கண்டும், அர்ச்சுனன் தனியனாய் நின்று பல வீரர்களையும் வென்று பசு நிரையை மீட்டியதைத் துரியோதனன் கண்டிருந்தும் முறையே இவ்விருவரும் இராமபிரானையும் தர்மபுத்திராதியரையும் போர் செய்து வெல்லக்கருதினார்களாதலால் இவர்கள் மூடராவார்கள் என்றார். அப்படியானால் அசோகவன மழிவுற்ற விருத்தாந்தத்தையும், பசுநிரை மீட்டிய சம்பவத்தையும் அருளிச்செய்ய வேண்டுமென்று வேண்டினான். அப்பொழுது வைசம்பாயனர் இராம காதையையும், பாரதத்தையும் விரிவாகச் சொல்லத் தொடங்கினார்.

இதனால் ஆசார்யன் சிஷ்யனுடைய நிலைமையறிந்து அவனுக்கு விருப்பத்தை விளைவித்து உபதேசிப்பது கடமையாகு மென்பது வெளியாயிற்று.

இரண்டு பக்ஷிகள்.

ஜீவாத்மா பரமாத்மாக்களை இரண்டுபக்ஷிகளாக வேதம் உருவகஞ் செய்தது. அறிவற்ற பொருளாகிய அசித்தோடும், அறிவுடைப்பொருளாகிய ஜீவனோடும் விட்டுப்பிரியாத ஸம்பந்தம் ஈசுவரனுக்கிருந்தாலும் அசித்துக்குரிய பரிணாமதோஷங்களும் ஜீவனுக்குண்டாகும் சுக துக்கங்களும் ஈசுவரனுக்கு வருவதில்லை என்பதை விளக்கிக்காட்டுவதற்காகவே இவ்வாறு பக்ஷிகளாக உருவகஞ்செய்தது. அதாவது மாறு.—

த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே ।
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி
அநச்நந்நந்யோ அபிசாகசீதி ॥

என்பதாம். இதன்பொருள்.—ஸுபர்ணா—(ஜீவேசுவரர்கள்) நல்லஞான ரூபமான சிறகையுடையவர்களாயும், ஸயுஜா—ஒருவர்க்கொருவர் ஒப்புமையுடையவர்களாயும், ஸகாயா—சேஷ சேஷிரூபமான உறவினையுடையவர்களாயும், ஸமாநம் விருக்ஷம்—ஒரு சரீரமாகிய மரத்தை, பரிஷஸ்வஜாதே—பற்றியிருக்கிறார்கள், தயோ:—அந்த ஜீவேசுவர்களுள், அந்ய:—ஜீவனனபக்ஷியானது, பிப்பலம்—கர்மமாகியபழத்தை, ஸ்வாது அத்தி—இனிமையாகப்புஜிக்கிறது, அந்ய:—வேறான ஈசுவரனாகிய பக்ஷியானது, அநச்நந்—(கர்மபழத்தை) உண்ணாமல், அபிசாகசீதி—மிகவும் நன்றாய்ப் பிரகாசிக்கிறது; எ-று.

பாபமின்மை முதலிய எட்டுக்குணங்கள் * ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் உண்டென்ற ஒற்றுமைபற்றி ஸயுஜா என்பதற்கு ஸாம்யமுடைய ஜீவேசுவரர்களென்று பொருள் குறிப்பிடப்பட்டது. ஈசுவரன் நல்லவனும் எல்லாமறிந்தவனும் எல்லாம்வல்லவனுமிருப்பான். ஜீவன் அவற்றுக்கு மாறாக அடிமையும் சிறிது அறிவாற்றலையுடையவனுமிருப்பான். ஆதலால் ஜீவேசுவரர்கள் குணங்களால் எத்தனையோ வேற்றுமையுடையவர்களாயிருப்பரென்பது பெறப்பட்டது. அங்ஙனமிருக்க, இங்குச்சாம்யமுடைய ஜீவேசுவரர்களென்பது கூடுமோவென்னில்;—பாபமின்மை முதலிய எட்டுக்குணங்கள் ஜீவேசுவரர்களாகிய இருவருக்குமிருக்கின்ற ஒற்றுமைபற்றிக் கூறியதாற் கூடுமென்க. இதனை ஏகதேச சாம்யமென்பர்.

அன்றி, சேஷத்வ சேஷித்வ தர்மமுடைய ஜீவேசுவரர்களென்றும் கொள்ளலாம். சேஷத்வ சேஷித்வ தர்மங்கள் ஒன்றுக்கொன்று

* எண்குணங்களாவன — பாபமின்மை. ஜரையின்மை, மரணமின்மை. சோகமின்மை, தாகமின்மை, பசியின்மை. ஸத்யகாமத்வம், ஸத்யஸங்கல்பத்வம்; என்பன.

வேற்றுமையுடையதாயிருந்தாலும் தாம்பத்ய சாம்யம் போல இங்கு ஒற்றுமை கொள்ளத்தக்கது. "துல்ய சீல வயோ வ்ருத்த:" என்று இராமபிரானும் சீதையும் குணத்தாலும் வயதாலும் ஒழுக்கத்தாலும் சமானர்களென்று குறிப்பிடப்பட்டுளது. இதற்கு இராமபிரானுக்கு எந்தக் குணமும் வயதும் ஒழுக்கமுமுண்டோ, அந்தக் குணமும் வயதும் ஒழுக்கமும் சீதைக்கு முண்டென்று பொருள் கொள்ளலாகாது. இராமபிரானுக்குப் பதினாறுவயதும் அவனுக்கியைந்த சீதைக்குப்பன்னீராட்டைப்பிராயமும், இராமனுக்கு அறிவு ஆற்றல் ஓர்ப்புக் கடைப்பிடி என்ற குணங்களும், சீதைக்கு நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்ற குணங்களும், இராமனுக்கு ஆடவர்கட்குரிய ஒழுக்கமும், சீதைக்குப் பெண்மகளிர்க்குரிய ஒழுக்கமும் மாறுதிருக்கின்றமையால் இவ்விருவரும் சமானமான குணஞ்செயல் வயதுடையவரென்று குறிப்பிட்டனர். இந்தச் சாம்யத்தைத் தான் தாம்பத்ய சாம்யமென்பர். உயர்ந்தோனுக்கு உத்க்ருஷ்டத்வ தர்மமும், இழிந்தோனுக்கு அபக்ருஷ்டத்வ தர்மமுமிருப்பதே தகுதியாம். இந்தக் குணங்கள் மாறுபடுவது விபரீதமாம். இங்குரைத்த சாம்யம் தகுதிபற்றி வந்ததால் * சாம்யலக்ஷணம் மாறுபடினும் குறையில்லையென்க.

இந்தப்பிரமாணத்தில் ப்ரக்ருதி காரியமான சரீரத்தை விருக்ஷமாகவும், ஜீவாத்மா பரமாத்மாக்களைப் பக்ஷிகளாகவுமுரைத்ததனால் மூன்று தத்வங்களுண்டென்பதும், அவற்றுள் ஈசுவரவஸ்துவே கர்ம வசப்படாது எல்லாவற்றிற்கும் தலைமை பூண்டிருக்குமென்பதும் வெளியாயின.

மேலும் சாஸ்திரம்வல்ல பெரியோர்கள் ஈசுவரன் கர்மவசப்பட்டவனில்லையென்பதை நன்றாய் நிரூபித்துள்ளார்கள். அது வருமாறு.—ஈசுவரன் சித்து அசித்துக்களாகிய எல்லா வஸ்துக்களிலும் அந்தராத்

* "தத்பிந்நத்வே ஸதி தத்கதபூயோதர்மவத்த்வம் ஸாத்ருஶ்ய லக்ஷணம்" தன்னின் வேறுகியும், தனனிடத்துள்ள குணத்தை மிகுதியுமுடையதாயுமிருப்பதே சாம்ய தர்மமுடையதாம், உதாரணம்—சந்திரனுக்கொப்பாகிய முகமென்பதில் முகம சந்திரனின் வேறுகியும், சந்திரனிடத்திலுள்ள மிகுதியான அழகினையுடையதாயுமிருப்பதால், முகம சந்திரனுக்கொப்பாயிற்று. இந்த வாதருசியலக்ஷணம் இங்குக கொள்ளலாகாது.

மாவாய் விட்டுநீங்காதிருப்பானாகில் சித்து அசித்துக்குள்ள தோஷங்கள் வருமன்றோவெனில்? வராது. ஆத்மாவானவன் சரீரத்தோடு கூடியிருந்தாலும் சரீரத்திற்குரிய பால்யம் யௌவன முதலிய விகாரங்கள் ஆத்மாவுக்கு வருவதில்லை. அதுபோல சித்து அசித்துக்களோடு ஈசுவரன் கூடியிருந்தாலும் அவற்றின் தோஷம் அவனுக்கு வருவதில்லை; என்று சமாதானம் கூறினார்கள்.

மேலும், சரீரத்தோடுகூடியிருந்தாலும் சரீரத்திற்குரிய தோஷங்கள் ஆத்மாவுக்கு வருவதில்லையானாலும், சரீரத்தைப்பற்றியிருக்கிற நிபந்தனத்தால் ஆத்மாவுக்குச் சுக துக்கங்கள் வருவதுபோல, ஈசுவரன் இந்தச்சித்து அசித்துக்களை விட்டு நீங்காதிருக்கின்ற நிபந்தனத்தால் அவனுக்கும் சுக துக்கங்கள் உண்டாகத்தடையில்லையே என்ற ஆசங்கையுண்டாகலாம். அதற்குச் சமாதானம் வருமாறு.——

ஆத்மா, கர்மநிபந்தனத்தால் சரீரத்திற் புகுந்துள்ளானாதலால் சுக துக்கங்களையநுபவித்தற்குரியவனாவான். ஈசுவரன் அநுக்ரஹத்தாற் புகுந்துள்ளானாதலால் இவன் சுகதுக்கங்களையநுபவித்தற்குரியவனாகான். தண்டனைப்பட்ட கள்வனும் சிறைவாசஞ்செய்கிறான். அவனைக்கண்காணிப்பதற்காக அதிகாரியும் சிறையிற் புகுகிறான். இவ்விருவருக்கும் சிறைவாசமிருந்தாலும் கள்வனுக்கே சிறைவாசம் துக்கரூபமாகவிருக்கும். அதிகாரிக்கு அங்ஙனமிருப்பதில்லை. அதுபோலப் பிரவேச விசேஷத்தால் ஈசுவரனுக்குச் சித்தசித்துக்களின் சம்பந்தத்தால் விகார சுகதுக்கங்கள் வருவதில்லை. ஸர்வேசுவரனுக்கு இருவினைத்தொடர்பில்லையென்று நூல்களிற் பலவிடங்களினும் நிரூபிக்கப்பட்டுளது.

ஸ்ரீ:

ஆதிவராகர்.

பகவதவதாரங்களில் ஆதிவராகப்பெருமானும் ஒருவராவர். பிரம்மதேவனுடைய இரண்டாவது * பரார்த்தத்தினுதியில் அவதரித்தவர். பிரமதேவனது முதல் பரார்த்தத்தின் முடிவில் மகாபாத்மகல்பத்தி

*பரார்த்தம்—பிரமதேவனுக்குள்ள ஐம்பது வயது.

னிறுதியில் பிரளயவெள்ளத்தினுல் பூமி பாதாளத்தில் அழுந்தியது. அப்பொழுது நான்முகன் எம்பெருமானை நோக்கித் தோத்திரஞ்செய்தனன். அதற்கு இரங்கியருளிய எம்பெருமான் நீருக்குஞ்சேற்றுக்கும் பின்வாங்காத மஹா வராகரூபியாய் அவதரித்தனன் இவ்வவதார விசேஷத்தைக்கண்ட பூமிப்பிராட்டியார் தம்மை ஜலத்தினின்றும் எடுப்பதற்காகவே தோன்றினர் என்று துதிசெய்தார். அதன்மேல் எம்பெருமான் ஜலத்தில் ஆழ்ந்திருந்த பூமியைத் தன்கொம்பினுல் எடுத்தனர்.

அதனபிறகு பிராட்டியார் உலகம் உய்யும்பொருட்டுப் பலதர்மங்களமைந்துள்ள கேள்விகளைக் கேட்டனர். வராக நயினுர் இதுவே நல்ல சமயமென்று அக்கேள்விகட்கெல்லாம் தக்கபடி விடையளித்தனர். இவ்விடைகளில் பல ரஹஸ்யப்பொருளடங்கியுள்ளன. இதன் விவரமெல்லாம் வராக புராணத்திற் காணலாம். மேலும் வராகப் பெருமாள்,

‡ "ஸ்திதேமநஸிஸுஸ்வஸ்தேசரீரேஸதியோநர:
தாதுஸாம்யேஸ்திதேஸ்மர்த்தவிச்வரூபஞ்சமாமஜம்
ததஸ்தம்ரியமாணஞ்சகாஷ்டபாஷாணஸந்நிபம்
அஹம்ஸ்மராமிமத்பக்தம்நயாமிபரமாங்கதிம்"

என்ற சரம சுலோகத்தை அருளிச்செய்தனர். இதனைக்கேட்ட பூமிப்பிராட்டி மகிழ்ச்சியுற்றனள்.

---

‡ இதன் பொருள்—எவனொருவன் தன் மனதும் சரீரமும் சுகமாகவிருக்க, கபவாத பித்தங்களும் சரியான நிலைமையிலிருக்கும்போது, ஜகத்ஸ்வரூபியாயும் பிறப்பிலியாயுமிருக்குமென்னை நினைத்தால், அவன் முன் சொல்லப்பட்டவைகளால் பாதிக்கப்பட்டு ப்ரக்ருதி நிவ்ருத்திகட்குச்சக்தியின்றி கல் புத்களைப்போல மரணமடையக்கூடிய தசையில், அவன் என்னை நினைக்காவிட்டாலும் முன் என்னை நினைத்ததுகொண்டு என்பக்த கோடிப்ரவிஷ்டனுனவனை நானேநினைத்து எல்லாகதியிலும்உயர்ந்த கதியையடைவிப்பேன்; எ-ம்.

ஸ்ரீ:

ஸ்ரீபெரும்புதூர்,

இராமாநுஜன் பொன்னடி ஸபை.

பல ஆஸ்திகர்களின் நன்முயற்சியால் இச்சபை ஸ்தாபிக்கப்பெற்றது. அகதியாயிருப்பார்க்கும், விருப்புடைய மாணவர்கட்கும் கல்வி பயிற்றுவித்து ஸத்ஸம்ப்ரதாயத்தை நாடெங்கும் பரவச்செய்ய வேண்டுமென்பதே இச்சபையின் முக்யநோக்கமாம். ஆசார்ய ஸமாஶ்ரயணத்தில் விருப்புடைய கைப்பொருளிலார்க்குதவிபுரிதலும், ஆசாரியன்றிருவடியடைந்தவர்கட்கு வேண்டிய காரியஞ்செய்தலும், பிரசங்கவாயிலாக நல்லொழுக்கத்தைப் பிறப்பித்தலும் பிறவும் இச்சபையின் பொது நோக்கங்களாம். கருதிய காரியம் கைகூடுவதற்குப் பொருளீட்டுதல் முதலிய பல துறைகளிற்புகுந்து இச்சபை உழைத்து வருகிறது. 'ஸத்விஷயம் நடையாடுவதற்குப் பல இடையூறுகளையுடைய இக்காலத்திலும் இத்தகைய காரியங்களைச் செய்வாரிருக்கின்றனரே' என்று ஆய்ந்தமைந்த அறிஞர்கள் அகமிகமகிழ்ந்து கொண்டாடுவதற்கு இச்சபையார்கள் பாத்திரபூதராய் விளங்குகின்றனர். இவர்களது நன்முயற்சி போற்றத்தக்கதே.

'ஜகதாசார்யராகிய ஸ்ரீபாஷ்யகாரர் திருவவதரித்த இத்திவ்யதேசத்தில், அவர் திருவுள்ளத்திற்குப்பாங்காக இச்சபை முன்னேற்றமுறும்படி செய்யவேண்டும்' என்று இச்சபையின் நிரந்தர அக்ராஸநராகிய ஸ்ரீமாந் A. S. அரங்கசாமய்யா அவர்கள் உழைத்து வருகிறார். ஸ்ரீபாஷ்யகாரரும் இவரது கருத்தை நிறைவேற்றிவைப்பாரென்பதில் ஐயமில்லை.

ஸ்ரீபாஷ்யகாரர் திக்விஜயஞ்செய்து அறுசமயங்களைகட்டு மிகவும் பிரஸித்தராயெழுந்தருளியிருந்தாரேனும், தற்காலத்தில் இவரது திருவவதார ஸ்தலம் ஒரு சிலர்க்கே தெரியும்படியான நிலைமையிலிருக்கிறது. ஸ்ரீவைஷ்ணவ குழாத்தினர்க்கு இஃதோர் பெருங்குறையென்றே சொல்லலாம். இச்சபையினது முன்னேற்றத்தால் இக்குறைபாடகலுமாறு எல்லாமவல்ல இறைவன் இன்னருள் புரிவானாக.

குலசேகர ராமாநுஜதாஸர்,
காரியதரிசி.